# திண்டிவனம் நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

31.03.2022–ம் வியாழக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற சாதாரணக் கூட்டப் பொருள் விபரம்.

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள் விபரம்</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>நடைபெற்ற சாதாரண நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022 நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தும், நகரமன்ற தலைவராக தேர்ந்தெடுத்தற்கும் நன்றி தெரிவித்து திருமதி.R.நிர்மலா ரவிச்சந்திரன் , நகர மன்ற தலைவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை திரு.சீனு(எ) சின்னுசாமி முன் மொழிய, திரு.மு.தே.பாபு வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.</td><td>தீர்மானம் எண்:474.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>2</td><td>திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகளிலும் ஏற்கனவே உள்ள 3018 எண்ணிக்கை தெருவிளக்குகளில் 926 எண்ணிக்கை LED விளக்குகள் தவிர்த்து 2092 எண்ணிக்கை தெரு விளக்குகளுக்கு பதிலாக LED விளக்குகள் அமைக்கும் பணிகளுக்கு ரூ.362.68 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுமப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மொத்த LED தெரு விளக்கு கள்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்)</th></tr>
<tr><td>1</td><td>திண்டிவனம் நகராட்சியில் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளை புதியதாக 20W, 40W, 90W, 120W மற்றும் 200 W LED விளக்குகள் பொருத்தும் பணி</td><td>2092 – எண்ணிக் கை</td><td>362.68</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>2092 – எண்ணிக் கை</td><td>362.68</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்:475.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3 | 2022–2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தயார் செய்யப்படும் உணவிற்கு தேவையான மளிகை பொருட்கள் மாதந்தோறும் விழுப்புரம் மாவட்ட மொத்த கூட்டுறவு விற்பனை பண்டக சாலை திண்டிவனத்திலிருந்து வாங்க ஆகும் (01.04.2022 முதல் 31.03.2023 வரை) உத்தேச செலவினம் ரூ.10.00/–( பத்து இலட்சத்திற்கு) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:476.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 4 | 2022–2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் ஸ்ரீஅன்னபூரணி மகளிர் குழுவை சேர்ந்த 12 உறுப்பினர்களால் இட்லி, சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் ஆகிய உணவுகளை தயார் செய்யப்பட்டு மலிவு விலை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட உணவினை தயார் செய்யும் ஸ்ரீஅன்னபூரணி மகளிர் குழுவை சேர்ந்த 12 உறுப்பினர்களுக்கும் தினசரி வருகை பதிவின்படி மாதம் சம்பளமாக வழங்க ஓராண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) ஆகும் செலவினம் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 1% (EPF) பணியாளர்களுக்கு நிர்வாக கட்டணம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகையாக நிறுவனத்திற்கு செலுத்தவும் செலவினம் ஆகியவற்றிற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.15.00 (பதினைந்து இலட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:477.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 5 | 2022–2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தயார் செய்யப்படும் இட்லி, சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் உணவினை மலிவு விலை விற்பனை செய்ய தேவையான டோக்கன் ரசீது புத்தகம் மற்றும் தேவையான பதிவேடுகள் ஆகியவற்றை தமிழ்நாடு மல்டிபர்போஸ் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து வாங்க ஓராண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50/– (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு__<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:478.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 6 | 2022-2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தயார் செய்யப்படும் உணவிற்கு தேவையான எரிவாயு சிலிண்டர்கள் மாந்தோறும் சாந்தாராம் இன்டேன் கேஸ் நிலையம் திண்டிவனத்திலிருந்து வாங்க ஓராண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.50/- (ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:479.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 7 | 2022-2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் தயார் செய்யப்படும் உணவிற்கு தேவையான பச்சை காய்கறிகளையும் மற்றும் பால் மாதந்தோறும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண். 2218/2015/அ2. நாள். 05.06.2015ல் பச்சை காய்கறிகளை குறைந்த விலையில் வெளி சந்தையிலும் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதால் வெளி சந்தையில் வாங்க ஓராண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை)ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.50/-( ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:480.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 8 | 2022-2023ம் ஆண்டிற்கு இந் நகராட்சி செஞ்சி சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் விற்பனைக்கு தயார் செய்யப்படும் உணவு மற்றும் இயற்கை பேரிடர் காலத்தில் உணவு தயாரித்திட ஏதுவாக தேவையான பச்சரிசி மற்றும் புழுங்கல் அரிசியை மாதந்தோறும் மலிவு விலையில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் திண்டிவனத்திலிருந்து வாங்க ஓராண்டிற்கு (01.04.2022 முதல் 31.03.2023 வரை) ஆகும் உத்தேச செலவினம் ரூ.70000/-(ஏழுபதாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4499/2014/எச்2) | தீர்மானம் எண்:481.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 9 | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு வருகை தர இருப்பதால் நகரிலுள்ள அனைத்து முக்கியச் சாலைகள், தெருக்களில் மண்மேடுகளை அகற்றி சீர்செய்வதற்கு மணிநேர வாடகை அடிப்படையில் ஒரு மண்தள்ளும் இயந்திரத்தினையும், நாள் வாடகை அடிப்படையில் ஒரு டிப்பர் லாரியினையும் 10 நாட்களக்கு வாடகைக்கு அமர்த்தி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.50 (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 8–2 /எச்1/2022) | தீர்மானம் எண்:482. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 10 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.13433/2018/ஜே1, 17.09.2018ம் தேதிய கடிதத்தில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவாமல் தடுத்திட டெங்கு மஸ்தூர் பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகரபகுதியில் 33 வார்டுகளில் 18169 வீடுகள் உள்ளன 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் 60 மஸ்தூர் பணியாளர்கள் மற்றும் Rapid Rescue Team 12 பணியாளர்களை தனியார் (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்கள் மூலம் முன்மொழிவுகளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி முன் மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டு அனுமதி எதிர்ர்ார்க்கப்படும் நிலையில் தற்காலிகமாக தனியார் மூலம் பணி அமர்த்தி டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு M/S சரம் என்விரோ சர்வீசஸ், சென்னை நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.387.50/– என்ற விகிதத்தில் ஒப்பந்த புள்ளி பெறப்பட்டு மன்றத்தில் அனுமதிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.238,239,240,241 நாள்.30.09.2020 அதன்படி 01.07.2021 முதல் 27.09.2021 வரை 90 நாட்களுக்கு 60 மஸ்தூர் பணியாளர்கள் மற்றும் Rapid Rescue Team 12 பணியாளர்களை கொண்டு தனியார் (Outsourcing) ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் 15.06.2021 தேதிய அனுமதி மற்றும் ந.ம.தீ.எண்.205–ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து உரிய நிர்வாக அனுமதி இதுவரை பெறப்படவில்லை. பணியின் அவசியம் கருதி ஏற்கனவே அளித்துள்ளள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் அதே ஒப்பந்ததாரரின் மூலம் மேலும் 01.04.2022 முதல் 31.05.2022 வரை 61 நாட்களுக்கு ஒப்பந்த நீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.13433/2018/ஜே1, 17.09.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் 60 மஸ்தூர் பணியாளர்கள் மற்றும் Rapid Rescue Team 12 பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கொரானா வைரஸ் காய்ச்சல் கட்டுப்படுத்தும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ள காரணத்தினால் நிர்வாக நலன் கருதி 72 பணியாளர்கள் 01.04.2022 முதல் 31.05.2022 வரை 61 நாட்களுக்கு நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் தோராயன செலவினம் ரூ.17.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1767/2020/எச்1) | தீர்மானம் எண்:483. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 11 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.26178/2017/பி3 நாள்.11.12.2017ன் படி இந்நகராட்சியில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 124 பணியாளர்களை பணிக்கு அமர்த்தி திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி திண்டிவனம் நகரில் உள்ள 18 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவுப்பணிகள் செய்ய 06.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/S சரம் என்விரோ சர்விசஸ் சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகர மன்ற தீர்மான எண்.46இ நாள்.22.02.2019ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு ந.க.எண்.977/2017/எச்1, நாள்.28.02.2019 படி பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.03.2019 முதல் திடக்கழிவுப்பணிகள் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் ந.க.எண்.30813/J3/2018 நாள்.11.012.2018ல் கூடுதலாக 42 பணியாளர்களை அமர்த்தி திடக்கழிவுப் பணிகள் செய்ய அனுமதி வழங்கியதன்பேரில் ஏற்கனவே நகராட்சி திடக்கழிவுப்பணிகனை செய்து வரும் M/S சரம் என்விரோ பிரைவேட் சர்விசஸ், சென்னை நிறுவனத்திற்கு 174 பணியாளர்களுக்கான ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டு இருந்த நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.453/– என்ற விகிதத்திலேயே 42 பணியாளர்களை கூடுதலாக பணிக்கு அமர்த்திக் கொள்ள நகரமன்ற தீர்மான எண்.462 நாள்.04.03.2019 அனுமதிக்கப்பட்டு ந.க.எண்.977/2017எச்1, நாள்.04.03.2019ன் படி பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் அதன் பின்னர் நகராட்சியில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களையும் மேற்படி நிறுவனம் மூலமே பூர்த்தி செய்யப்பட்டது.<br>மேற்படி நிறுவனம் 01.03.2019 முதல் நகராட்சி அலுவலக உத்தரவில் குறிப்பிட்ட வகையில் பணியாளர்களை பணிக்கு அமர்த்தி நல்ல முறையில் குப்பைகளை சேகரித்தல் தரம் பிரித்தல் சாலைகள் பெருக்குதல், கால்வாய் சுத்தம் செய்தல், உரம் தயாரித்தல், உள்ளிட்ட அனைத்து திடக்கழிவு பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றனர். மேலும் பணியாளர்களுக்கு சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் முறையாக வழங்கப்பட்டு உள்ளது. பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய சேமநல நிதி, காப்பீடு முதலியவற்றையும் முறையாக செலுத்தி ரசீது வழங்கி உள்ளனர். இவர்களது ஒப்பந்த காலம் 31.03.2022ல் பூர்த்தியடைகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21787/2021/EA2 நாள்:02.10.2021 சுற்றிக்கையின் படி புதியதாக ஒப்புந்தப்புள்ளி கோர இவ்வலுவலக ந.க.எண்.4302/2021/எச்1 நாள்.19.11.2021 கடிதம் மூலம் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது வரை நிர்வாக அனுமதி பெறப்படவில்லை. மேலும் நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதாலும் திடக்கழிவுப்பணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டும் M/S சரம் என்விரோ பிரைவேட் சர்வீசஸ் நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே தினகூலி தொகை அடிப்படையில் 01.04.2022 முதல் 31.05.2022 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. ஒப்பந்தம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்:484. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>2. மேற்படி தோராயண செலவினத்திற்கு தொகை ரூ.54.00/– இலட்சம் வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.977/2017/எச்1)</td><td></td></tr>
<tr><td>12</td><td>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு கீழ்காணும் தளவாடப் பொருட்களை உடனடியாக வாங்கி வழுங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கம் (ரூபாய் ஐந்து இலட்சம்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>தளவாடப் பொருட்களின் விபரம்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>தென்னந்துடைப்பம்</td><td>400</td></tr>
<tr><td>2</td><td>மூங்கில் மலாரம் (படல்)</td><td>100</td></tr>
<tr><td>3</td><td>அலுமினிய அன்னக்கூடை</td><td>80</td></tr>
<tr><td>4</td><td>வாய்க்கால் கரண்டி</td><td>80</td></tr>
<tr><td>5</td><td>முள்கொக்கி</td><td>80</td></tr>
<tr><td>6</td><td>கம்பி படல் (மலாரம்)</td><td>80</td></tr>
<tr><td>7</td><td>கைத்தகடு (மண்தள்ளும் தகடு)</td><td>100</td></tr>
<tr><td>8</td><td>கத்தி (செடி வெட்டுவதற்கு)</td><td>80</td></tr>
<tr><td>9</td><td>மண்வெட்டி</td><td>40</td></tr>
<tr><td>10</td><td>கடப்பாரை</td><td>20</td></tr>
<tr><td>11</td><td>அரிவாள் (மரம்வெட்ட)</td><td>40</td></tr>
<tr><td>12</td><td>மண்தள்ளும் பிரஷ்</td><td>100</td></tr>
<tr><td>13</td><td>பிளாஸ்டிக் பாண்டு</td><td>80</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு:–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 8–5 /எச்1/2022)</td><td>தீர்மானம் எண்:485.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 13 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கும், நகராட்சி அவசரஅவசரப்பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுவரும் TN16 G0048 எண்ணுள்ள TATA HITACHI வாகனத்திற்கு புதியதாக இரண்டு பின்பக்க பெரிய டயர்களும், இரண்டு டியூப்களும் வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.1,10,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 8-7 /எச்1/2022)** | தீர்மானம் எண்:486.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 14 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும், பொதுசுகாதாரப் பணிகளுக்கும் கிருமிநாசினியாக பயன்படுத்துவதற்கு கீழ்காணும் பொருட்களை வாங்கி வழங்கிட ஆகும் தோராயன செலவினம் ரூ.325000/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. நீர்த்த சுண்ணாம்பு - 20 டன்<br>2. பிளிச்சிங் பவுடர் - 4 டன்<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 8-4 /எச்1/2022) | தீர்மானம் எண்:487.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 11 வார்டுகள் வரையிலான எரியாத மின்விளக்குகள் உள்ள இடத்தில 50 W LED மின் விளக்குகளாக மாற்றி அமைப்பதற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான தோராய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்க்கு மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:488.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 16 | இந்நகராட்சிக்குட்பட்ட 12 முதல் 22 வார்டுகள் வரையிலான எரியாத மின்விளக்குகள் உள்ள இடத்தில 50 W LED மின்விளக்குகளாக மாற்றி அமைப்பதற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான தோராய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்க்கு மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:489.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17 | இந்நகராட்சிக்குட்பட்ட 23 முதல் 33 வார்டுகள் வரையிலான எரியாத மின்விளக்குகள் உள்ள இடத்தில 50 W LED மின்விளக்குகளாக மாற்றி அமைப்பதற்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான தோராய மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்க்கு மேற்படி செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:490.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 18 | இந்நகராட்சிக்கு சொந்தமான சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் சர்வே எண். 33/4 மற்றும் 34/5–ல் 6 ஏக்கர் நிலத்தில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைப்பதற்க்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றது. அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர் அவர்களின் ஆலோசனைப்படி பேருந்து நிலையம் அமையஉள்ள இடத்தினை சுற்றி முள்வேலி அமைக்கவும், பொக்லைன் கொண்டு இடத்தினை சமப்படுத்தவும் தெரிவித்துள்ளார், அதற்கான தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:491.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 19 | திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 34/5ல் 6 ஏக்கர் நிலத்தில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டதன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடமானது ஏரிபகுதியை சுற்றி உள்ள காரணத்தால் அப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.<br>மேற்படி வழக்கின் W.P.NO 23/63/209, 28.03.2011–ம் தேதிய தீர்ப்பில் திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 34/5ல் உள்ள 6 ஏக்கர் புதிய பேருந்து நிலையம் அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி தீர்ப்பு வழங்கி மேற்கண்ட இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது.<br>இதனை தொடர்ந்து அரசாணை நிலை எண்.20 ந.நி(ம) கு.வ.துறை(IV) நாள்.25.01.2022ல் ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி வழங்குமாறு TUFIDCO நிறுவனத்தில் கோரப்பட்டதில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வழக்கின் தீர்ப்பில் தெரிவித்துள்ளபடி மாநில அரசு வழங்கறிஞரின் சட்ட கருத்துரு பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க சென்னை மாநில அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்து பெற்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்படி, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, மேற்படி, பகுதியில் உள்ள திண்டிவனம் ஏரியினை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்த வேண்டும் என மாநில அரசு வழக்கறிஞர் அவர்கள் வாய்மொழி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது<br>இதன்படி திண்டிவனம் நகராட்சி சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அமைந்துள்ள திண்டிவனம் ஏரியை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்திட தோராய செலவினம் ரூ.48.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.<br>இதன்படி திண்டிவனம் ஏரிப்பகுதியை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்திட ரூ.48.00 லட்சத்திற்கு ஏற்கனவே பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட Infra Gap | தீர்மானம் எண்:492.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | Filling fund (இடைவெளி நிரப்பும் நிதி)யிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 20 | இந்நகராட்சிக்கு சொந்தமான முருங்கப்பாக்கம் நகராட்சி ஆரம்பப்பள்ளியில் மாணவர்கள் அமருவதற்க்கு போதிய இடம் வசதி இல்லாத காரணத்தினாலும் மாணவர்கள் சேர்க்கை அதிகமாக இருப்பதாலும் கூடுதல் வகுப்பரை அமைத்து தருமாறு முருங்கப்பாக்கம் தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது, அதனை தொடர்ந்து ரூ.9.90 இலட்சத்திற்க்கு கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:493.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 21 | இந்நகராட்சிக்கு சொந்தமான முருங்கப்பாக்கம் நகராட்சி ஆரம்பப்பள்ளியில் மாணவர்கள் மதிய உணவு அருந்துவதற்கும் விழா மேடைக்கு தளம் அமைக்க முருங்கப்பாக்கம் தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது, அதனை தொடர்ந்து ரூ.9.90 இலட்சத்திற்க்கு கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:494.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 22 | இந்நகராட்சிக்கு மூன்று நீரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எதிர்வரும் கோடை காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து அதனால் குறைந்த அளவு குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க பாதிக்கப்படும். மேலும் நகர பகுதியிலும் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்ட குறைந்து அதனால் குடிநீர் அல்லாத தேவைகளுக்கான தண்ணீருக்கும் பற்றாக்குறை ஏற்படும் எனவே, கோடை காலத்தில் வார்டு எண்.1 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் தேவையான இடங்களுக்கு தற்காலிகமாக வாடகை டேங்கர் மூலம் குடிநீர் சப்ளை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூபாய்.10.00 இலட்சத்திற்கம் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:495.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 23 | இந்நகராட்சிக்கு மூன்று நீரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எதிர்வரும் கோடை காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து அதனால் குறைந்த அளவு குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க பாதிக்கப்படும். மேலும் நகர பகுதியிலும் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்ட குறைந்து அதனால் குடிநீர் | தீர்மானம் எண்:496.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அல்லாத தேவைகளுக்கான தண்ணீருக்கும் பற்றாக்குறை ஏற்படும் எனவே, கோடை காலத்தில் வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் தேவையான இடங்களுக்கு தற்காலிகமாக வாடகை டேங்கர் மூலம் குடிநீர் சப்ளை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூபாய்.10.00 இலட்சத்திற்கும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 24 | இந்நகராட்சி ஈப்பு (Jeep) TN16A 5556, TN 16C 2346 மற்றும் Office Genset, Eraiyanur Genset ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், சர்வீஸ் செய்யவும் அதற்காக SCHANGALAYA MOTORS மற்றும் Chennai SSSS Enquipment Pvt Ltd நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் மற்றும் ஆயில் சர்வீஸ் பணியை செய்யவும், மேற்படி ஈப்புகளுக்கான இன்சூரன்ஸ் கட்டணம் மற்றும் டீசல் செலவினம் ஆகியவற்றிற்கு 2022–2023ம் வருடத்திற்கான தோராய செலவினம் (TN16A5556 –10,00,000/–, TN 16 C 2346 – 1000000/– Office Genset – 4,00,000/–, Eraiyanur Genset – 6,00,000/–) ரூ.30,00,000/–க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:497.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 25 | இந்நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக குழாயில் ஏற்படும் உடைப்புகள், பழுதடைந்த வால்வுகள் மாற்றுவது மற்றும் கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.9,00,000/– க்கும் மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:498.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 26 | திண்டிவனம் நகராட்சிக்கு உட்பட்ட நேரு வீதியில் பம்பிங் மெயின் உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்யவும், அதற்கான தோராய மதிப்பீடு ரூ.50000/–க்கு மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:499.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 27 | திண்டிவனம் நகராட்சியில் இந்திரா நகர் மேநீர்தேக்க தொட்டி, மற்றும் பூதேரி ஏரி கிணற்றில் இருந்து கிடங்கல்–1 பகுதிகளுக்கு குடிநீர் செல்லும், குடிநீர் பகிர்மான குழாயில் உள்ள வால்வுகள் பழுதடைந்துள்ளதால் சீரான குடிநீர் விநியோகம் வழங்கமுடியவில்லை. மேலும் பழைய வார்டு எண்–**23** ஜாய்ஸ் பொன்னையா தெரு, வார்டு எண்–**31** கரியன் தெரு மற்றும் வார்டு எண்–**32** ஒத்தவாடை தெரு ஆகிய தெருக்களில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் அடைப்பு மற்றும் அழுத்தம் காரணமாக பழுது ஏற்பட்டு, தெருக்களில் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் செல்லவில்ல.<br>எனவே, மேற்கண்ட பழுதடைந்த வால்வுகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களை புதிதாக மாற்றி சரிசெய்ய, அதற்கான தோரய மதிப்பீடு ரூ.**2,50,000/–**ம் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் | தீர்மானம் எண்:500.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>1) மதிப்பீட்டு தொகை ரூ.2,50,000/–க்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2) நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மூலம் பணியினை மேற்கொள்ளலம்.</td><td></td></tr>
<tr><td>28</td><td>திண்டிவனம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 72796 மக்கள் தொகை கொண்ட நகராட்சி ஆகும். தற்போது சுமார் 78608 மக்கள் தொகை கொண்டதாக உள்ளது. மேலும் 33 வார்டுகளை உள்ளடக்கிய நகராட்சி ஆகும்.<br>தற்போது இந்நகராட்சியில் நகரமன்ற தலைவர் பயன்பாட்டில் TN32Q 5818 ஈப்பு வாகனமும் (Bolero) ஆணையாளர் பயன்பாட்டில் TN32V 7733 ஈப்பு வாகனமும் (Bolero) உள்ளது. இதில் நகரமன்ற தலைவர் பயன்பாட்டில் உள்ள வாகனம் 2006ம் ஆண்டும் மற்றும் ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள வாகனம் 2001ம் ஆண்டும் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது வரை பயன்பாட்டில் உள்ளது. மேற்காணும் இரண்டு வாகனமும் சுமார் 20 ஆண்டுகள் மற்றும் 15 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட வாகனம் என்பதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு கூடுதல் செலவினம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இரண்டு வாகனங்களையும் கழிவு செய்து புதியதாக நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் பயன்பாட்டிற்கு BOLERO வாகனம் வாங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வாகன விபரம்</th><th>பயன்படுத்தும் அலுவலர்</th><th>உத்தேச செலவின தொகைரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>MAHINDRA BOLERO</td><td>CHAIRMAN</td><td>9.50</td></tr>
<tr><td>2</td><td>MAHINDRA BOLERO</td><td>COMMISSIONER</td><td>9.50</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண்:501.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29</td><td>1வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. கோ.சத்தீஷ் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.<br>I. சந்தைமேடு பகுதியில் உயர் கோபுர மின் விளக்கு (High Mast Light) மற்றும் எல்இடி (LED) விளக்குகளை சரி செய்து வழங்க கோருதல்.<br>II. ராஜகோபால் நகரில்ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் வசதி செய்து வழங்க கோருதல்.<br>III. காந்தி நகரில் உள்ள வடிகால் பாலம் பழுதடைந்து நிலையில் உள்ளதை அகற்றி புதிய சிறு பாலம் அமைக்க கோருதல்.</td><td>தீர்மானம் எண்:502.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | IV. 1வது வார்டில் மேடு பள்ளம் உள்ள இடங்களில் மணல் அடித்து நிரப்பி தர கோருதல். | |
| 30 | **2வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. எஸ்.திருமகள் செங்கேணி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. அய்யந்தோப்பு பகுதியில் அய்யனாரப்பன் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு மற்றும் மினி டேங்க் அமைக்க கோருதல்.<br>II. அய்யந்தோப்பு குன்னமேடு பகுதியில் மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைக்க கோருதல்.<br>III. அய்யந்தோப்பு பிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள கம்பத்தில் உபகரணங்கள் அமைத்து தெருவிளக்குள் அமைக்க கோருதல்.<br>IV. அய்யந்தோப்பு குன்னமேடு பகுதியில் பிள்ளையார் கோவில் பின்புறம் பேருந்து நிலையம், எம்.ஜி.ஆர் நகர், காமராஜ் நகர் ஆழ்துளை கிணறு அமைக்க கோருதல்.<br>V. அய்யந்தோப்பு பகுதியில் எம்.ஜி.ஆர் நகர் 2வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க கோருதல்.<br>VI. அய்யந்தோப்பு பகுதியில் காமராஜ் நகர் 3வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க கோருதல்.<br>VII. அய்யந்தோப்பு குண்டுமேடு பகுதியில் தார் சாலை அமைக்க கோருதல்.<br>VIII. அய்யந்தோப்பு பகுதியில் குளக்கரையை சீரமைத்து விளையாட்டு மைதானம் அமைக்க கோருதல்.<br>IX. அய்யந்தோப்பு பகுதியில் பேருந்து நிலையம் பக்கத்தில் உடற்பயிற்சி கூடம் அமைக்க கோருதல்.<br>X. அய்யந்தோப்பு பகுதியில் நூலகம் அமைக்க கோருதல்.<br>XI. அய்யந்தோப்பு பகுதியில் சமுதாய கூடம் அமைக்க கோருதல்.<br>XII. அய்யந்தோப்பு பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள ஆலன் தெருவில் இருந்து அய்யந்தோப்பு பேருந்து நிலையம் வரை மின் விளக்கு அமைக்க கோருதல்.<br>XIII. அய்யந்தோப்பு பகுதியில் பேருந்து நிலையம் அருகில் ஆழ்துளை கிணறு அமைக்க கோருதல்.<br>XIV. அய்யந்தோப்பு குண்டுமேடு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்க கோருதல்.<br>XV. அய்யந்தோப்பு பகுதியில் எம்.ஜி.ஆர் நகர் 3வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க | தீர்மானம் எண்:503.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கோருதல்.<br>XVI. அய்யந்தோப்பு பகுதியில் காமராஜ் நகர்3வது தெருவில் தார் சாலை அமைக்க கோருதல். | |
| 31 | **3வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. A.ரேணுகா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. குட்டிமணி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு சுத்தம் செய்து சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>II. குட்டிமணி நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் அமைத்து மற்றும் மின் மோட்டார் குடிநீர் தொட்டி அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:504.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 32 | **4வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. லதா சாரங்கபாணி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. குட்டைகரை பகுதியில் மின்மோட்டார் தொட்டி அமைக்க கோருதல்.<br>II. 4வது வார்டில் மேடு பள்ளம் உள்ள இடங்களில் மணல் அடித்து நிரப்பி தர கோருதல். | தீர்மானம் எண்:505.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 33 | **5வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. க.முத்துலட்சுமி கதிரேசன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. ரோஷணை கெங்கை அம்மன் கோவில் குறுக்கு வீதி பகுதியில் அமைந்துள்ள போர் கைபம்பில் மின் மோட்டார் சின்டேங்க் அமைக்க கோருதல்.<br>II. ரோஷணை கெங்கை அம்மன் கோவில் தெரு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க கோருதல்.<br>III. 5வது வார்டில் மேடு பள்ளம் உள்ள இடங்களில் மணல் அடித்து நிரப்பி தர கோருதல். | தீர்மானம் எண்:506.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 34 | **6வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதிA.ஷேக் தில்ஷாத் பேகம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. குட்டைக்கார தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைக்க கோருதல்.<br>II. முகமது நபி தெருவில் கை பம்பு சரி செய்தல் மற்றும் சின்டேக்ஸ் டேங்க் அமைக்க கோருதல்.<br>III. உமர் புலவர் 2வது தெருவில் பொது குடிநீர் குழாய் அமைக்க கோருதல்.<br>IV. பசுவத்தம்மன் கோயில் தெருவில் இந்து பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பால்வாடி உள்ளது. இடம் பற்றாக்குறையால் தனியாக ஒரு பால்வாடி அமைக்க கோருதல்.<br>V. குட்டைக்கார தெருவில் மயிலம் முருகன் மண்டபம் பின்புறம் சிமெண்ட் சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:507.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 35 | **7வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. புனிதா ராஜேந்திரன்அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. கலைஞர் நகர் பகுதியில் நீண்ட காலமாக குடிநீர் பிரச்சினை நிலவுவதால் போர்வெல் மற்றும் மின்மோட்டார் அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:508.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | II. கலைஞர் நகரையும் அய்யந்தோப்பு சாலையை இணைக்கும் இடத்தில் வாய்கால் உள்ளது அந்த வாய்காலில் பாலம் கட்டி தர கோருதல் | |
| 36 | 8வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. ர.ரவிச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.<br>I. ஆஸ்பிட்டல் ரோடு முருங்கப்பாக்கம் சந்திப்பில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்க கோருதல்.<br>II. ஆஸ்பிட்டல் ரோடு நீதிபதி குடியிருப்பு அருகில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் அமைக்கும் கோருதல்.<br>III. ஆஸ்பிட்டல் ரோடு பெரிய ஆண்டவர் கோயில் தெருவில் ஆழ்துளை கிணறு சுத்தம் செய்து சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>IV. ஆஸ்பிட்டல் ரோடு பிள்ளையார் கோவில் அருகில் திறந்த வெளி கிணறு சுத்தம் செய்யவும் மற்றும் சுற்று சுவர் அமைத்தல் மற்றும் மேல் பகுதியில் இரும்பு கீரில் அமைக்கவும் சின்டெக்ஸ் டேங்க் பேனால் போர்டு அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:509.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 37 | 9வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ர.நிர்மலா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.<br>I. சலவாதி செல்லும் மேம்பாலம் மூங்கில் அம்மன் கோவில் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்க கோருதல்.<br>II. சீனுவாசன் தெருவில் புதியமாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>III. சீனுவாசன் தெரு சோடா கடை அருகில் ஆழ்துளை கிணறு சுத்தம் செய்தும் சின்டெக்ஸ் மற்றும் மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>IV. ஏரிக்கோடி தெருவில் புதியதாக பாலம் அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:510.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 38 | 10வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பாஸ்கர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.<br>I. டி.வி நகர் பகுதியில் ஸ்ரீ கெங்கை அம்மன் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள கைபம்பு மாற்றி மின்மோட்டார் மற்றும் டேங்க் அமைக்க கோருதல்.<br>II. டி.வி நகர் பகுதியில் பொது கழிப்பிடம் சீரமைத்து அமைக்க கோருதல்.<br>III. டி.வி நகர் பகுதியில் ஸ்ரீ கெங்கை அம்மன் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>IV. டி.எம்.ஜி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் அமைக்க கோருதல்.<br>V. காமராஜர் தெருவில் கைபம்பு அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:511.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | VI. சீனுவாச நகர் பகுதியில் கைபம்பு அமைத்து தர கோருதல்.<br>VII. 10வது வார்டில் மேடு பள்ளம் உள்ள இடங்களில் மணல் அடித்து நிரப்பி தர கோருதல். | |
| 39 | **11வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. பி.ஹேமமாலினி ஜெயராஜ் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. ஜே.பி நகரில் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் அமைத்து தர கோருதல்.<br>II. முனீஸ்வரன் கோவில் பகுதியில் பைப்லைன் அமைத்து தர கோருதல்.<br>III. நகராட்சி துவக்கப்பள்ளியை பழுதடைந்த கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய வகுப்பறைகள் கட்டித் தர கோருதல்.<br>IV. காவேரிப்பாக்கம் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் கை கழுவும் பழுதடைந்துள்ளதை மாற்றி புதியதாக கை கழுவும் இடம் கட்டி தர கோருதல்.<br>காவேரிப்பாக்கம் நகராட்சி மேல்நிலைப்பள்ளியின் மேல் தளம் பழுதடைந்துள்ளதை சரி செய்யவும் மற்றும் பள்ளிக்கு BSNL இணையதள வசதி செய்ய கோருதல். | தீர்மானம் எண்:512.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 40 | **12வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. செ.சரவணன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. தீர்த்தக்குளம் வடக்கு கரையில் அங்கன் வாடி அருகில் உள்ள பழைய இடிந்து விழும் நிலையில் உள்ள நீர்தேக்க தொட்டியையும் கட்டிடத்தையும் புதுப்பித்து 150 மீட்டர்பைப் லைன் அமைத்து தர கோருதல்.<br>II. திந்திரிணீஷ்வரர் ஆலயத்தின் அருகில் பக்த கோடிகளுக்கு ஆண் மற்றும் பெண் கழிப்பறை அமைத்து மற்றம் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் அமைத்து தர கோருதல்.<br>III. பஜனை கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் குழாயுடன் அமைத்து தர கோருதல்.<br>IV. கருமகாரியங்கள் நடக்கும் கிணறு மற்றும் அதனை சுற்றியுள்ள இணைப்பு சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் அதனை சரி செய்ய கோருதல். | தீர்மானம் எண்:513.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 41 | **13வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. எம்.டி.பாபு அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. மாரிக்குளம் தெருவில் உள்ள கரும காரிய மண்டபம் அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:514.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 42 | **14வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். சுதா பிர்லா செல்வம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. வசந்தபுரம் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் போர் அமைக்க கோருதல்.<br>II. எம்.ஜி.ஆர். நகரில் உள்ள நகராட்சி பொது கழிப்பறை பழுதடைந்துள்ளதை சரி செய்ய கோருதல். | தீர்மானம் எண்:515.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 43 | **15வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ஆர்.வளர்மதி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. பாரதிதாசன் பேட்டையில் பால்வாடி அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல்.<br>II. பாரதிதாசன் பேட்டையில் நகராட்சி பொது கிணறுகளை சுத்தம் செய்து புதிய 2inch பகிர்மான குழாய் அனைத்து தெருக்களுக்கும் அமைத்து தர கோருதல்.<br>III. கணபதி நகர்,கே.பி.நகர்,மூகாம்பிகை நகர்,தில்லை நகர், ஆகிய பகுதிகளுக்கு புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர கோருதல்.<br>IV. 10 லோடு மேடு பள்ளம் உள்ள இடங்களில் மணல் அடித்து நிரப்பி தர கோருதல். | தீர்மானம் எண்:516.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 44 | **16வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.எம்.கார்த்திக் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. 16 வது வார்டில் 4வது தெரு மற்றும் 5வது தெரு இரண்டு ஆழ்துளை கிணறு உள்ளது. சின்டெக்ஸ் டேங்க் நீர்தேக்க தொட்டி கட்டி குழாயுடன் புதுப்பித்து தர கோருதல்.<br>II. திரௌபதி அம்மன் கோவில் தெரு இறக்கத்தில்(உழவர் சந்தை பின்புறம்) ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் குழாயுடன் அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:517.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 45 | **17வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. இ.ரேணுகா க/பெ இளங்கோவன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. தரம்சந்த் நகரில் உள்ள மெயின்ரோட்டியில் தண்ணீர் தொட்டி புதியதாக கட்ட தர வேண்டும்.<br>II. தியாக சண்முகம் பிள்ளை தெருவில் உள்ள தண்ணீர் தொட்டி பழுதடைந்து அதனை சரி செய்ய கோருதல்.<br>III. இராஜகுளக்கரையில் கிராம நிர்வாக அலுவலக அருகே உள்ள தண்ணீர் தொட்டியை அகற்றி புதியதாக தண்ணீர் தொட்டி கட்டிதர கோருதல். | தீர்மானம் எண்:518.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| 46 | **18வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ஆர்.லட்சுமி பிரபா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. டாக்டர் அழகப்பா தெருவில் உள்ள எம் டி கிரேட் பள்ளி எதிரில் கம்பம் அமைத்து மின் விளக்கு அமைத்து தர கோருதல்.<br>II. டாக்டர் அழகப்பா தெருவில் சந்திப்பில் ஆழ்துளை கிணறு அமைத்து மற்றும் நீர் தேக்கத் தொட்டி மின் மோட்டார் அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:519.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | III. டாக்டர் அழகப்பா தெருவில் எம் டி கிரேட் பள்ளி எதிரில் தரைப்பாலம் மற்றும் கழிவுநீர் கால்வாய் சீரமைத்து தர கோருதல். | |
| 47 | **19வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெ.எஸ்.சரவணா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. புது மசூதி தெருவில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப்லைன் அமைத்து தர கோருல். | தீர்மானம் எண்:520. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 48 | **20வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ஆர்.ரம்யா ராஜா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. நரிக்குறவர் பகுதியில் உள்ள குளத்தை தூய்மை செய்து சுற்றிலும் வேலி மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் குழாய் வசதி செய்ய கோருதல்.<br>II. நத்தமேடு பகுதியில் நவீன கழிப்பிட வசதி செய்ய கோருதல்.<br>III. காவேரிப்பாக்கம் பகுதியில் கழிப்பிடம் பழுதடைந்து உள்ளது அதனை அகற்றி விட்டு புதியதாக நவீன கழிப்பிடம் கட்டிதர கோருதல்<br>IV. நரிக்குறவர் காலனி, நத்தமேடு, காவேரிப்பாக்கம் மூன்று பகுதிகளிலும் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் குழாய் அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:521. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 49 | **21வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. A.தீபா விக்னேஷ்வர்சிங் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. ராஜன் தெருவில் நீர்தேக்கத்தொட்டி டேங்க் பழுடைந்துள்ளதால் அதனை சரி செய்ய கோருதல்.<br>II. ஜான்சிராணி தெருவிலுள்ள கிணற்றைத் தூர் வாரி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு சரி செய்ய கோருதல்.<br>III. கோலன் தெரு,அம்பேத்கார் தெருவிற்கு மையப்பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து விசைப்பம்பு பொருத்தித்தர கோருதல். | தீர்மானம் எண்:522. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 50 | **22வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி V.ராஜலட்சுமி வெற்றிவேல் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் நகரமன்ற துணைத்தலைவர் அவர்களுக்கு தனி அறை கட்ட கோருதல்.<br>II. சிங்காரத்தோப்பு பகுதியில் படித்த இளைஞர்களின் நலன் கருதி வேலைவாய்ப்பு பயிற்சிபெற பொது நூலகம் அமைத்து தர வேண்டும்.<br>III. பெருமாள் கோவில் தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆண்கள் 10 அறை பெண்கள் 10 அறை கொண்ட குளியலறையுடன் கூடிய நவீன பெரிய கழிவறை கட்டிடம் கட்டிடத் தர வேண்டும்.<br>IV. இந்திய அரசிலமைப்பின் தந்தை புரட்சியாளர் | தீர்மானம் எண்:523. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அம்பேத்கர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலையை மேம்பாலம் கீழ் அரசு செலவில் அமைத்து தர வேண்டும்.<br>V. நகராட்சி அலுவலகத்தில் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவ வெண்கல சிலை அரசு செலவில் அமைத்து தர வேண்டும்<br>VI. சிங்காரத்தோப்பு லட்சுமி நகர் பகுதிக்கு புதியதாக போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் நீர்தேக்க கட்டிடம் கட்டித்தர கோருதல்.<br>VII. கர்ணாவூர் பாட்டை ஓடைக்கரையில் சுடுகாடு அமைந்துள்ளது அந்த இடம் குடியிருக்கும் பகுதியில் இடையுறாகவும் உள்ளது புதியதாக சுடுகாடு கட்ட இடம் தேர்வு செய்ய வேண்டும்<br>VIII. சிங்காரத்தோப்பு பகுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் இரண்டு நியாய விலைக்கடைகளை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டித்தர வேண்டும்.<br>IX. பெருமாள் கோவில் தெருவில் உள்ள கைபம்பில் மின் மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் அமைத்து தர கோருதல்.<br>X. எம்.ஜி.ஆர். தெருவில் உள்ள Slaughte house (2) (மாட்டிறைச்சிக்கூடம்) கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளது. அதனை உடனடியாக பயன்படுத்த வசதிகள் செய்து தர வேண்டும்.<br>XI. எம்.ஜி.ஆர். தெருவில் ஏற்கனவே கட்டப்பட்டு பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ள கழிப்பறையை சீரமைத்து தர கோருதல்.<br>XII. பெருமாள் கோவில் தெருவில் உள்ள நகராட்சி இடத்தில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு சுற்றுசுவர் அமைத்து தர வேண்டும். | |
| 51 | **23வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.E.ஜனார்த்தனன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. வகாப் நகரில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல்.<br>II. வகாப் நகரில் உள்ள கண்ணயா தெரு DKP வீட்டுக்கு அருகில் கல்வெட் அமைத்து தர கோருதல்<br>III. வீராங்குளம் முதல் தெருவில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்துள்ளது அதனை சீரமைக்க புதியதாக போர் போட்டு அதே இடத்தில் அமைத்து தர கோருதல். | தீர்மானம் எண்:524.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 52 | **24வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. ஏ.இராம்குமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. வள்ளலார் நகரில் குடிநீர் தொட்டி புணரமைக்க வேண்டும்.<br>II. காமராஜர் நகரில் குடிநீர் தொட்டி புணரமைக்க வேண்டும். | தீர்மானம் எண்:525.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | III. இந்திராநகர் 2வது தெருவில் குடிநீர் தொட்டி புணரமைக்க வேண்டும். | |
| 53 | **25வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. N.ரேகா நந்தகுமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. சின்னு தெருவில் பவர்பிளோக் சாலை மற்றும் வடிகால்வாய் அமைத்து தர வேண்டும். | தீர்மானம் எண்:526. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 54 | **26வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. எஸ்.உமா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. இராஜகோபால் தெருவில் போர்வெல் அமைத்து டேங்க்வைத்து மோட்டார் அமைத்து தர வேண்டும். | தீர்மானம் எண்:527. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 55 | **27வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. கு.ஷபியுல்லா அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. நேரு வீதி பூந்தோட்டம் இடத்தில் பொது மக்களுக்காக விளையாட்டு பூங்கா அல்லது நடைபயிற்சி பூங்கா அமைத்து தர கோருதல்.<br>II. கசாமியான் மற்றும் ஆர்.எஸ். பிள்ளை தெரு ஆகிய தெருக்களிலுள்ள தண்ணீர் டேங்க் பழுதடைந்துள்ளத சீரமைத்து தர கோருதல்.<br>III. ஆர்.எஸ். பிள்ளை தெரு ஏரிகரை ஓரம் உள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்துள்ளதை சீரமைத்து தர கோருதல்.<br>IV. ஆர்.எஸ். பிள்ளை தெரு அரிகிருஷ்ணா மண்டபம் பின்புறம் உள்ள முள்புதறில் வீடுகளுக்கு அருகிலேயே பன்றிகளுக்கு உணவு அளித்து வளர்த்து வரும் இடமாக உள்ளது. இதனால் பொது மக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால் பன்றிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட கோருதல்.<br>V. வார்டு எண் 27–ல் மின் விளக்குகள் இல்லாத 10 கம்பங்களில் புதிதாக மின் விளக்கு அமைத்து தரப்பட வேண்டும். மேலும் ஏற்கனே உள்ள எரியாத 8 மின் விளக்குகளை சீரமைக்க தர வேண்டும். | தீர்மானம் எண்:528. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 56 | **28வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. க.சந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. சஞ்சீவிராயன் பேட்டை 1வது தெருவில் அமைந்துள்ள சிந்து நகரில் இரண்டு சிறுபாலம் அமைத்து தர வேண்டும்.<br>II. சஞ்சீவிராயன் பேட்டை 1வது தெருவில் அமைந்துள்ள நீர் தேக்க தொட்டிலிருந்து பைப்லைன் பழுதடைந்துள்ளதை சீரமைக்க கோருதல்.<br>III. சஞ்சீவிராயன் பேட்டை 1வது தெருவில் அமைந்துள்ள சிந்து நகரில் நகராட்சி குடிநீர் பைப்லைன் அமைக்க கோருதல். | தீர்மானம் எண்:529. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | IV. சஞ்சீவிராயன் பேட்டை பகுதியில் பம்பு ரூம்கள் பராமரிப்பு,மின்சதனம் மற்றும் மோட்டார் கேபிள்கள் பழுது நீக்கம் செய்ய கோருதல்.<br>V. சஞ்சீவிராயன் பேட்டை ஏரிக்கோடி தெருவில் கால்வாய் அமைக்க கோருதல். | |
| 57 | **29வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி. ஜி.அரும்பு குணசேகர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. கிடங்கல்–1 பிள்ளையார் கோவில் தெரு ஈஸ்வரன் கோவில் அருகில் மற்றும் பாரதிதாசன் பேட்டை பகுதியில் அமைந்துள்ள சலவை தொழில் செய்யும் இடத்திலும் மினி வட்டர் டேங்க் அமைத்து தரவேண்டும்.<br>II. இந்திரா காந்தி பேருந்து நிலையம் அருகில் மழையால் பழுதடைந்த கிடங்கல் செல்லும் பாலத்தின் மீது தற்காலிகமாக தார்சாலை அமைத்து தரவேண்டும்.<br>III. பால்வாடி கட்டிடம் வாடகை கட்டிடத்தில் இயங்க வருகிறது மேலும் தற்போது கட்டிடம் பழதடைந்த இடியும் நிலையில் உள்ளதால், அதை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டிதரப்படவேண்டும்.<br>IV. பாரதிதாசன் தெரு பகுதியில் உள்ள சலைவை தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடம் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு பணிகள் செய்து தர கோருதல்.<br>V. எங்கள் பகுதியில் உள்ள பூதேரி குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து சீரான குடிநீர் வழங்க வேண்டும்.<br>VI. எங்கள் பகுதியில் அன்றாடம் குப்பைகள் தேங்கி வருவதால் சரியான ஆட்களை நியமித்து குப்பைகளை அகற்ற வேண்டும். | தீர்மானம் எண்:530.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 58 | **30வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. T.G.சுதாகர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. முத்துகிருஷ்ணன் தெருவில் கழிவுநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு பழுதடைந்துள்ளது சீரமைக்க தர வேண்டும். | தீர்மானம் எண்:531.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 59 | **31வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. எம்.மணிகண்டன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. பூதேரி பகுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் நியாய விலைக்கடையை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டித்தர வேண்டும்.<br>II. கோட்டைமேடு பகுதிக்கு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதியதாக நியாய விலைக்கடை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டித்தர வேண்டும்.<br>III. ஈஸ்டன் தோப்பு தெருவில் உள்ள பள்ளிவாசலில் உள்ள சின்டெக்ஸ் நீர் தேக்க தொட்டியை சீரமைத்து தர வேண்டும்.<br>IV. பூதேரி மேலாண்டை தெருவில் உள்ள பொது | தீர்மானம் எண்:532.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கிணறு உள்ளது அதில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கோருதல்.<br>V. பிள்ளையார் கோவில் எதிரில் உள்ள கைபம்பு மற்றும் சின்டெக்ஸ் மினி டேங்க் கட்டிடத்தை பழுதடைந்துள்ளதை சீரமைக்க வேண்டும்.<br>VI. செந்தமிழ் நகரில் உள்ள முருகன் கோவில் எதிரில் உள்ள கைபம்பு சரி செய்து சின்டெக்ஸ் மினி டேங்க் கட்டிடம் கட்டி தர வேண்டும்.<br>VII. ராஜன்நகர் பகுதியில் ராமக்குளம் இடத்தில் உள்ள கைபம்பு சின்டெக்ஸ் மினி டேங்க் கட்டிடம் கட்டி தர வேண்டும்.<br>VIII. ராஜன்நகர் பகுதியில் மாரியம்மன் கோவில் தெரு அருகில் உள்ள கைபம்பு மினி சின்டெக்ஸ் டேங்க் கட்டி தர வேண்டும்<br>IX. ராஜன்நகர் பகுதியில் கருமகாரியம் எதிரில் உள்ள சின்டெக்ஸ் மினி டேங்க் பழுதடைந்துள்ளதை சீரமைக்க வேண்டும். | |
| 60 | **32வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. ஜி.பார்த்திபன்அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. மைலம் ரோடு இந்திராநகர் 2வது தெரு கழிவு நீர் கால்வாய் புதிதாக அமைத்துதர வேண்டும்<br>II. மைலம் ரோடு போலீஸ் லைன் பின்புறம் குடிசை பகுதியில் புதிதாக கழிவுநீர் கால்வாய் அமைத்துதர வேண்டும்<br>III. ஒத்தவாடை தெருவில் புதிதாக மினி சின்டெக்ஸ் நீர்தேக்க தொட்டி அமைத்து தரவேண்டும்<br>IV. ஒத்தவாடை தெருவில் உள்ள டியுப் லைட்களை மாற்றி புதிதாக எல்.இ.டி விளக்குகளாக மாற்றி தர வேண்டும். | தீர்மானம் எண்:533.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 61 | **33வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. சீனி சின்னசாமி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**<br>I. பீரங்கிமேடு மற்றும் சிவவேலன் நகரில் புதிதாக ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டி கட்டித்தரப்பட வேண்டும்.<br>II. நல்லியகோடான் நகர் உமாபதி விரிவாக்கத்தில் ஆழ்துளை கிணறு தொட்டியும் பழுதடைந்துள்ளதை சரிசெய்து தரவேண்டும்.<br>III. தென்றல் நகர் விரிவாக்கம் பகுதியிலுள்ள வீடுகளுக்கு குடிநீர் வசதி செய்ய விடுபட்ட தெருக்களில் குடிநீர் குழாய் அமைத்து தர வேண்டும்.<br>IV. உமாபதி தெரு விரிவாக்கத்தில் உள்ள கல்வெட்டு பழுதடைந்துள்ளதால் புதிதாக கட்டித்தராப்படவேண்டும்.<br>V. கோபால் தெரு எதிரில் கைபம்பு பழுதடைந்துள்ளதை சரிசெய்துதர வேண்டும். | தீர்மானம் எண்:534.<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |